**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 பராபவ வருடம் சித்திரை மாதம் 02 ஆம் நாள்)**

**அ.வ.எண் : 258/2024**
**[CNR No : TNDG07 - 000898 – 2024]**

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர், தலைமை அஞ்சலக சாலையில் இயங்கிவரும் பாரத ஸ்டேட் வங்கி (Main) கிளை, அதன் மேலாளர் மூலம். --- வாதி

எதிர்

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அமரபூண்டி கிராமம், பள்ளிக்கூடத்தான்வலசு, கதவு எண்.3/44 என்ற முகவரியில் வசித்துவரும் கருப்புச்சாமி என்பவரின் மகன் சுமார் 54 வயதுள்ள K.ராஜேந்திரன். --- பிரதிவாதி

வாதி வங்கிக்கு மேற்படி கடன் தொகை ரூ.1,59,495/–ம் அதற்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 9.05 சதவீதம் பின்வட்டியுடன் சேர்த்து பிரதிவாதியை செலுத்திவைக்க உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதி வங்கிக்கு, பிரதிவாதியை செலுத்திவைக்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மதிப்பு விபரம்</u> :– ரூ.1,59,495/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.4,785/– பிரிவு 22ன்படி கட்டப்பட்டுள்ளது.

வழக்கு மூலம் : 13.11.2019, 23.01.2020 மற்றும் 27.12.2022

வழக்கு தாக்கல் செய்த நாள் : 26.11.2024

இந்த வழக்கானது 26.11.2024ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.04.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P.மகேந்திரன் மற்றும் B.மனோகரன் ஆகியோர் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக இருந்தும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
அ.வ.எண்.258/2024

## தீர்ப்பாணை

1. வாதி வங்கிக்கு, பிரதிவாதி தாவாத் தொகை ரூ.1,59,495/–மும், மேற்படி தொகைக்கு தாவாத் தேதியான 26.11.2024 முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீத வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6 சதவீத பின்வட்டியும் செலுத்திவைக்க வேண்டுமென்று கட்டளையிடப்படுகிறது.

2. இவ்வழக்கின் செலவு தொகையாக வாதி வங்கிக்கு பிரதிவாதி ரூ.7,629/– செலுத்திவைக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

### செலவுத் தொகை விபரம்

| | வாதிக்கு |
|---|---|
| | ரூ. பை |
| 1. நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | 4785 .00 |
| 2. வக்காலத்திற்கு | 10 .00 |
| 3. கட்டளை தயாரிக்க | 10 .00 |
| 4. கட்டளை சேர்ப்பிக்க | 35 .00 |
| 5. வழக்கறிஞர் கட்டணம் (முதுநிலை) | 2073 .00 |
| (இளநிலை) | 691 .00 |
| 6. வாதுரைக் கட்டணம் | 25 .00 |
| **மொத்தம்** | **7629 .00** |

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் நாளிட்ட தீர்ப்பாணையில் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.04.24 16:39:15 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**